## 16.6 பட்டயம் பெற்ற பொறியாளர்கள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் வேலை செய்தல் – ஓய்வு பெற்ற பட்டயம் பெற்ற பொறியாளர்கள்/ பட்டதாரிகள் / டிப்ளமோ பொறியாளர்களை வைத்து ஊராட்சிப் பணிகள் செய்தல்

ஊரக வளர்ச்சி (இ5)/துறை

அரசாணை (நிலை) எண் 135 நாள் : 3.7.1998

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண் 37505/98/ஊஅ(ம)நி3 நாள் 5.5.98.

**ஆணை**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் 27.4.98 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் ஊராட்சியின் சொந்த நிதியை உபயோகப்படுத்தி பணிகளை செய்யும் பொழுது ஊராட்சி ஒன்றிய பொறியாளர்களுக்கு பதிலாக பட்டயம் பெற்ற பொறியாளர்களை வைத்து ஊராட்சி பணிகளை மேற்கொள்ளலாம் என்று, கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்.

‘‘ஊராட்சிகளின் சுயநிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு கேரள மாநிலத்தில் உள்ளது போன்று பட்டயப் பொறியாளர்களை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்படும்.‘‘

2. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துரு கவனமாக ஆராயப்பட்டு, பட்டம் பெற்ற பட்டயப் பொறியாளர்களை வைத்து ஊராட்சிப் பணிகளை செய்ய கீழ்க்கண்ட முறையில் அரசு ஆணையிடுகின்றது.

**(அ) பட்டம் பெற்ற பட்டய பொறியாளர்களை பதிவு செய்தல்**

ஊராட்சிகளிலுள்ள பணிகளை செயல்படுத்த, பொறியியல் பட்டம் பெற்ற அல்லது டிப்ளமோ பட்டம் பெற்ற மற்றும் இத்தகைய தகுதிகளுடன் கூடிய ஓய்வுப்பெற்ற பொறியாளர்கள் அந்தந்த ஊராட்சி ஒன்றிய கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் பதிவு செய்து கொள்ளலாம். கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் இவர்கள் பெற்றுள்ள பட்டத்தின் மெய்த்தன்மையை பரிசீலித்து பதிவு செய்ய வேண்டும். இத்தகைய பட்டங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பெற்றதாக இருக்க வேண்டும். இதற்குரிய பதிவேட்டினை கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் தொடங்கி தன்னுடைய நேரடி பொறுப்பில் வைத்து பராமரிக்க வண்டும்.

**(ஆ) நிதி வரம்பு**

ஊராட்சிகளில் மேற்கொள்ளும் பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ. 1.00 லட்சத்திற்கும் குறைவாக இருந்தால் மட்டுமே பட்டம் பெற்ற பட்டயப்பொறியாளர்களை கொண்டு நிறைவேற்றிக்கொள்ளலாம். அதற்கு கூடுதலாக மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் பணிகளை ஒன்றியப்பொறியாளர்கள் மூலமாகவே மதிப்பீடு தயாரித்து அளவு, மேலளவு செய்து நிறைவேற்றப்பட வேண்டுமெனினும், திட்டப்பணிகளில் எந்தவித நிதி உச்சவரம்பின்றி எல்லா திட்டப்பணிகளையும் ஒன்றிய பொறியாளர்கள் மூலமாகவே நிறைவேற்றப்பட வேண்டும். பட்டம் பெற்ற பட்டயப்பொறியாளர்களை கொண்ட பணியனை நிறைவேற்றும்பொழுது அரசு நிர்ணயித்த விலை விகிதத்தில்தான் மதிப்பிட்டினை தயாரிக்க வேண்டும். இத்தகைய பணிகளுக்கு தனியார் பொறியாளர்களை மதிப்பீடு போன்ற பணிகளுக்கு பணியை மேற்பார்வையிடுதல் மற்றும் பில் பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தி கொள்ளலாம்.

(இ) இவ்வாறு தனியார் பொறியாளர்களை பயன்படுத்தும்போது பணிகளுடைய விபரம், எந்த பொறியாளர்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றது என்ற விபரங்கள் ஊராட்சியின தீர்மானம் பெற்று உரிய ஆணையை வழங்கப்பட வேண்டும்.

**(ஈ) கட்டணம்**

பட்டயம் பெற்ற பொறியாளரை வைத்து பணியை செய்யும்பொழுது கீழ்கண்ட விகிதங்களில் அவர்களுக்குரிய கட்டணத்தை ஊராட்சி நிதியிலிருந்து வழங்கலாம்.

1. மதிப்பீடு தயாரித்தல், தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்குதல் 1%

2. மேற்பார்வையிடுதல், தொழில்நுட்ப உதவி வழங்குதல் 3%

3. மேல் அளவு மேற்கொள்ளுதல், பட்டியல் தயாரித்தல் 1%

எனவே அனைத்து பணிகளையும் சேர்த்து 5 சதவிகிதமும், ஒவ்வொரு பணிக்கும் மேற்கண்ட சதவிகிதத்திற்கு மிகைப்படாமல் வழங்கலாம்.

**(உ) அளவுப்புத்தகம்**

இப்பணிகளுக்கான அளவுப்புத்தகம் ஊராட்சி மூலமாகவே வழங்கப்பட வேண்டும். அளவுப்புத்தகங்களை முறையாக எண்ணிட்டு வழங்கப்பட வேண்டும். பஞ்சாயத்து மூலமாக வழங்கப்பட்ட புத்தகத்தை தவிர வேறு புத்தகங்களில் மேலளவு செய்வது தடை செய்யப்படுகின்றது.

**(ஊ) ஆய்வு / தணிக்கை**

வேலைகளின் தரத்தினையும் மதிப்பினையும் உறுதி செய்ய மாவட்ட ஆட்சியர், தனது அதிகாரிகள் மூலம் இந்த வேலைகளை ஆய்வு / தணிக்கை செய்ய வேண்டும்.

இந்த அரசாணை நிதித்துறையின் 3310/FS/P/98 எண்ணும், 9.6.98 நாளிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்